வடகிழக்கு பருவமழை 2020
தனிகவனம்/ மிக அவசரம்

**விழுப்புரம், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள்**
**முன்னிலை: திரு.ஆ.அண்ணாதுரை,இ.ஆ.ப.,**

ந.க.பே.மே/ 17874 /2020 நாள்: 10.09.2020

பொருள்: பேரிடர் மேலாண்மை - விழுப்புரம் மாவட்டம் - வடகிழக்கு பருவமழை 2020 - வடகிழக்கு பருவமழை காரணமாக முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளும் பொருட்டு கோட்ட அளவில் மண்டல அலுவலர் (Sub-Divisional Level Nodal Officers) நியமனம் செய்து ஆணையிடப்படுகிறது

பார்வை: முதன்மைச் செயலர்/ வருவாய் நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை எண்: ந.க. Rc.No.N.C.I(4)/1875/2020 நாள்: 26.08.2020.

..............

ஆணை:

2020 வடகிழக்கு பருவமழையினை முன்னிட்டு விழுப்புரம் மாவட்டத்தில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டிய ஆயத்தப் பணிகள் மற்றும் வட்ட அளவில் நியமனம் செய்யப்பட்டுள்ள மண்டல அலுவலர்களை கண்காணிக்கும் பொருட்டு விழுப்புரம் மாவட்டத்திற்கு கோட்ட அளவில் மண்டல அலுவலர் (Sub-Divisonal Level Nodal Officers) இதன் மூலம் நியமனம் செய்து உத்தரவிடப்படுகிறது.

| வ. எண் | கோட்டத்தின் பெயர் (Sub-Divisional Level Nodal Officers) | நியமனம் செய்யப்படும் மண்டல அலுவலர் |
|---|---|---|
| 1 | திண்டிவனம் | சார் ஆட்சியர், திண்டிவனம்<br>கைப்பேசி எண் : 9445000423 |
| 2 | விழுப்புரம் | வருவாய் கோட்டாட்சியர், விழுப்புரம்.<br>கைப்பேசி எண் : 9445000424 |

வடகிழக்கு பருவமழைக்காலங்களில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை கண்காணித்திடும் பொருட்டு, தங்கள் வட்டத்திற்கு நியமனம் செய்யப்பட்டுள்ள மண்டல அலுவலர்களைக் கொண்டு குறுவட்ட வாரியாக அனைத்து துறை சார்ந்த அலுவலர்கள் கொண்ட குழுக்களை (**Firka Wise InterDepartmental Zonal Teams**) நியமனம் செய்து செயல்முறை ஆணையினை அனுப்பி வைத்திடவும், நியமனம் செய்யப்பட்டுள்ள குழுக்கள் பாதிப்புக்குள்ளாகும் பகுதியினை ஆய்வு செய்து அறிக்கையினை மண்டல அலுவலர்கள் மூலமாக அனுப்பி வைத்திடவும், மேலும் மழைக்காலங்களில் கோட்ட அளவில கண்காணித்து அவ்வப்போது அறிக்கை அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஒம்./-ஆ.அண்ணாதுரை,
மாவட்ட ஆட்சித்தலைவர்,
விழுப்புரம்.

//உ.ந.உ.ப.//

மாவட்ட ஆட்சித்தலைவருக்காக.

பெறுநர்
சம்பந்தப்பட்ட அலுவலர்கள்- விழுப்புரம் மாவட்டம்.
நகல்: முதன்மைச் செயலர்/வருவாய் நிர்வாக ஆணையர், பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடர் தணிக்கும் துறை, சேப்பாக்கம், சென்னை-5 அவர்களுக்கு தகவலுக்காகப் பணிந்து அனுப்பப்படுகிறது
நகல்: மாவட்ட காவல் கண்காணிப்பாளர், விழுப்புரம்.
நகல்: திட்ட அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, விழுப்புரம்.